# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்: 1226/2016/ந

ஆணை எண்: 0200/2016

நாள்: 07/12/2016

பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொது உரிமை பாதுகாப்பு சங்கம்,
மேற்கு தாம்பரம்,
சென்னை – 600 045. — முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி மற்றும் இருவர். — எதிர் மனுதாரர்

## ஆணை:

மனுதாரரது 03.11.2016 நாளிட்ட மனு 02.12.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.1226/16–ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனுவில் தாம்பரம் நகராட்சிக்கு சம்பந்தப்படாத பகுதிகள் சேர்க்கப்பட்டு முறைகேடாக உள்ளாட்சி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வாக்காளர் பட்டியலில் ஏற்பட்ட தவறுகளை திருத்தம் செய்து வெளியிட்டு, நேர்மையான தேர்தலை நடத்திட வழிவகை செய்யுமாறும் முறையிடப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், சரத்துகள் 243K மற்றும் 243ZA, 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் விதிகளின்படி இப்பொருள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டதென்பதால் தக்க நடவடிக்கைக்காக அசல் மனுவானது தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு மேலனுப்பப்படுகிறது.

இப்பொருள் குறித்து விவரங்களுக்கு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தினை தொடர்பு கொள்ளுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2016-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7-ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

1. செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், கோயம்பேடு பேருந்து நிலையம் எதிரில்), சென்னை.

2. பொதுச் செயலாளர், தமிழ்நாடு பொது உரிமை பாதுகாப்பு சங்கம், எண்.7, சண்முகம் சாலை, ரிலையன்ஸ் இன்சூரன்ஸ் அலுவலகம், மேற்கு தாம்பரம், சென்னை – 600 045.